

சீர்மிகு நகரத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக 2வது சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்ட தமிழ் நாட்டிற்கு குடியரசு தலைவர் அவர்களால் 27.09.2023 அன்று இந்தூரில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது. அவ்விருதினை பெற்றதற்காக நேற்று (29.09.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு விடம் முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர்.தா.கார்த்திகேயன், பேரூராட்சி களின் இயக்குநர், கிரன் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர், எஸ்.சிவராசு, தூத்துக்குடி மாநகராட்சி மேயர், பெ.ஜெகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.




நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று – மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாணவிக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் விருதுகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வஹாப், ரூபி மனோகரன், சண்முகையா, துணை மேயர் ராஜ், மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதிபாலன், கண்காணிப்பாளர் பாலசுப்ரமணியன் ஆகியோர் உள்ளனர்.

### தஞ்சை மாவட்ட ‘சத்யம்’ தொலைக்காட்சி

# செய்தியாளர் அலெக்ஸாண்டர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 30 -

தஞ்சை மாவட்ட சத்யம் டி.வி. செய்தியாளர் அலெக்ஸாண்டர் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

சத்யம் டிவி தஞ்சாவூர் மாவட்ட செய்தியாளராக 12 ஆண்டுகளாக பணியாற்றியும், ஊடகத் துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவருமான அலெக்ஸாண்டர் அவர்கள் (வயது 46), நேற்று (28.09.2023) உடல்நலக்குறைவால் உயிரிழந்தார் என்பதை அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்.

அலெக்ஸாண்டர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஊடகத் துறை நண்பர்களுக்கும் இத்துயர்மிகு நேரத்தில் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இரண்டாம் பருவ மலர்க்காட்சி தொடக்கம்!

நீலகிரி, செப். 30-

அரசு தாவரவியல் பூங்காவில் இவ்வாண்டு இரண்டாம் பருவத்தினை முன்னிட்டு மலர்க்காட்சியானது நேற்று (29.09.2023) காலை 09.30 மணியளவில் சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியர் ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டது. பூங்காவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வகையான சுமார் 4.00 இலட்சம் மலர்செடிகள் கொண்டு மலர்பாத்திகள் அமைக்கப்பட்டு தற்போது பூத்து சுற்றுவாப் பயணிகளின் கண்ணிற்கு விருந்தாக காட்சி அளித்து வருகிறது.

மேலும் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் இரண்டாம் பருவத்திற்கான 70 வகையான மலர்ச் செடிகளான டேலியா. சால்வியா, இன்காமேரிகோல்டு, பிரஞ்ச்மேரிகோல்டு, டெய்சி, காலண்டுலா, டயான்தஸ், பிரிமுலா, பால்சம், அஜிரேட்டம், சைக்ளமன், ஜெரேனியம், டெல்பினியம், கொச்சியா, ஆந்தூரியம் போன்ற 21500 மலர்த் தொட்டிகள் மற்றும் பசுமை தமிழகம் வலியுறுத்தி மலர்த்தொட்டிகளால் வடிவமைக்கப்பட்ட “GO GREEN” என்ற வடிவமைப்பும் மலர்க்காட்சி திடலில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், 7500 மலர்த்தொட்டிளைக் கொண்டு புல்வெளியில் இந்தியாவின் பெருமை மற்றும் புகழினை உலகளாவிய அளவில் பறைசாற்றிய சந்திராயன்3 விண்கல வடிவமைப்பும், நெகிழிப்பைகளை தவிர்க்கும். வகையிலும், மீண்டும். மஞ்சப்பைகளை பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையிலும் 1000 மலர்த் தொட்டிகளால் அலங்கரிக்கப்பட்ட வடிவமைப்பும் இன்று துவக்கி வைக்கப்பட்டது. இம்மலர்க்காட்சித் திடல் சுற்றுலா பயணிகளுக்காக ஒரு மாத காலம் திறந்து வைக்கப்பட உள்ளது. இம் மலர்க்காட்சியினை சுமார் 270000 சுற்றுலாப்பயணிகள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலை இணை இயக்குநர் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எனவே அனைத்து சுற்றுலாப்பயணி களும், பொது மக்களும் பூங்காவினைக் கண்டுகளித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



சுற்றுலாத்துறை அமைச்சர். கா.ராமச்சந்திரன், உதகை, அரசு தாவரவியல் பூங்காவில் இவ்வாண்டு இரண்டாம் பருவத்தினை முன்னிட்டு வண்ண பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மலர்த்தொட்டி வடிவமைப்புகளை நேற்று துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர், அரசு துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பிற்கிணங்க, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 27.9.2023 அன்று தமிழ்நாடு அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவுடன், சிங்கப்பூர் துறைமுகத்தில் (PSA) சரக்குப் பெட்டக முனையத்தைப் பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பினை ஏற்றுச் சென்ற

# அமைச்சர் எ.வ.வேலு - சிங்கப்பூர் துறைமுகத்தைப் பார்வையிட்டார்!

## “அந்நிய முதலீட்டை ஈர்க்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு உதவும்” என உறுதி!

சிங்கப்பூர், செப். 30-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பிற்கிணங்க, 27.9.2023 அன்று, சென்னையில் இருந்து சிங்கப்பூர் சென்றார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் பிற அதிகாரிகள் அடங்கிய குழுவுடன் ‘சிங்கப்பூர் துறைமுக சரக்குப் பெட்டக முனையத்தை’ 27.9.2023 அன்று பார்வையிட்டார்.

அமைச்சர் எ.வ.வேலுவிடம், சிங்கப்பூர் துறைமுகத்தின் சிறப்புகளைப் பற்றி, சிங்கப்பூர் துறைமுகத்தின் பிரதிநிதி எடுத்துக் கூறினார்.

பன்னாட்டு துறைமுக சரக்குப் பெட்டக முனையங்களில், சிங்கப்பூர் சரக்குப் பெட்டக முனையம் முதன்மையான ஒன்றாகும். இது சிங்கப்பூர் சரக்குப் பெட்டகப் பரிமாற்ற மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த சரக்குப் பெட்டக முனையம், துறைமுகச் சேவைகள் மற்றும் சரக்கு தீர்வுகளை வழங்குகிறது.

2023 ஆம் ஆண்டில், சரக்குகளைக் கையாள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டபோதிலும், இந்த துறைமுகம் மட்டும், 37 மில்லியன் சரக்குப் பெட்டகங்களை (37million TEU) வெற்றிகரமாக கையாண்டுள்ளது. பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்பு (Battery Energy Storage System-BESS), கணினி சார்ந்த ஒருங்கிணைந்த துறைமுக முனைய இயங்குதல் வசதி (Computer Integrated Terminal Operations Systems-CITOS) மற்றும் துறைமுக வலைதளம்(Portnet) போன்ற நவீன தொழிற்நுட்பங்கள். இந்த சாதனைக்கு காரணமாகும். சிங்கப்பூர் துறைமுகம் 55 கப்பல்கள் நிறுத்தும் தளம் மற்றும் சுமார் 50 மில்லியன் (50million TEU) சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் திறன் கொண்டது என்று, அமைச்சர் எ.வ.வேலு விடம் விளக்கிக் கூறினார்.

**தமிழ்நாட்டில் 1076 கி.மீ. கடற்கரை!**

சிங்கப்பூர் துறைமுக அலுவலர்களிடம், அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாட்டில் 1,076 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரை உள்ளது என்பதை தெரிவித்து, கடலூர் மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய இடங்களில் சிறு துறைமுகங்கள் அமைந்துள்ளன. இந்ததுறைமுகங்களையோ அல்லது இதர சிறு துறைமுகங்களில், ஏதேனும் பொருத்தமான சிறு துறைமுகங்களை மேம்படுத்துவது தொடர்பாக, விரிவாக விவாதித்தார்.

மேலும், தமிழ்நாட்டின் கடற்கரையின் திறனைப் பயன்படுத்துவதை, நோக்கமாகக் கொண்ட பிற வரவிருக்கும் திட்டங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

**அந்நிய முதலீட்டை அதிகரிக்க ஆலோசனை!**

தமிழ்நாட்டில் சிறு துறைமுகங்களை மேம்படுத்த அன்னிய முதலீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியமான வழிகள் குறித்தும், சிங்கப்பூர் துறைமுகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

துறைமுகங்கள் மற்றும் கடல்சார் திட்டங்களுக்கு, முதலீடுகளை எளிதாக்குவதற்கு, அனைத்து உதவிகளையும் வழங்குவதாக, அமைச்சர் எ.வ.வேலு உறுதியளித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்த, அமைச்சர் எ.வ. வேலு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, சிங்கப்பூர் துறைமுகப் பிரதிநிதிகள் உறுதுணையாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

# 2000 ரூபாய் நோட்டுகளை மாற்றும் காலக்கெடு இன்றுடன் நிறைவு!

சென்னை, செப்.30-

வங்கிகளில் ரூ.2000 நோட்டுகளை மாற்றிக் கொள்வதற்கான அவகாசம் இன்றுடன் (செப். 30) நிறைவடைகிறது. பெட்ரோல் விற்பனை நிலையங்கள், அரசு, ஆம்னி பேருந்துகளில் நேற்று முதல் ரூ.2000 நோட்டுகள் வாங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு நவம்பரில் ரூ.2000 நோட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த நோட்டுகளை கடந்த மே 19ம் தேதி ரிசர்வ் வங்கி திடீரென திரும்பப் பெறுவதாக அறிவித்தது. 2023 செப்.30ம் தேதிக்கு பிறகு ரூ.2000 நோட்டுகள் செல்லாது என்றும், அந்த நோட்டுகளை வைத்திருப்பவர்கள் வங்கியில் ஒப்படைக்குமாறும் அறிவிப்பை வெளியிட்டது.

இதையடுத்து, வங்கிகளில் ரூ.2000 நோட்டுகளை பொதுமக்கள் மாற்றி வந்தனர். இதுதவிர, அரசு, தனியார் பேருந்துகளிலும், பெட்ரோல் பங்க்குகளிலும் ரூ.2000 நோட்டுகளை கொடுத்து மாற்றிக் கொண்டனர்.

இந்நிலையில், வங்கிகளில் ரூ.2000 நோட்டுகளை மாற்றிக் கொள்ள ரிசர்வ் வங்கி கொடுத்த காலக்கெடு இன்றுடன் (செப்.30) நிறைவடைகிறது. இதையடுத்து, அரசு, தனியார் பேருந்துகள், பெட்ரோல் விற்பனை நிலையங்களில் (பெட்ரோல் பங்க்) ரூ.2000 நோட்டுகளை பெறுவது நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்தது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், பேருந்து நடத்துநர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், செப். 28ம் தேதிக்கு பிறகு, பேருந்துகளில் பயணிக்க பொதுமக்கள் ரூ.2000 நோட்டுகளை கொடுத்தால், வாங்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுபோல, பெட்ரோல் விற்பனை நிலையங்களில் ரூ.2000 நோட்டுகளை மாற்றிக் கொள்வதும் நேற்று முன்தினத்துடன் முடிந்து விட்டது. நேற்று முதல் பெட்ரோல் விற்பனை நிலையங்களில் ரூ.2000 வாங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில் 32 இடங்களில் கொடியேற்றல்!

# திருவெறும்பூரில் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

திருவெறும்பூர். செப். 30 -

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கழகக் கொடியை ஏற்றியும் நூற்றாண்டு விழா கல்வெட்டையும் திறந்து வைத்தார்.

கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை கட்சி நிர்வாகிகள் ஒரு ஆண்டு கொண்டாட வேண்டும் என அறிவுறுத்திய நிலையில் அதன் அடிப்படையில் தி.மு.க.வினர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா, மருத்துவ முகாம் உள்ளிட்ட பல்வேறு விதமாக திருச்சி தெற்கு மாவட்டத்தில் கொண்டாடி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கீழக் குறிச்சி, சோழமாதேவி, நவல்பட்டு, குண்டூர், கும்பக்குடி, காந்தலூர், பழங்கனாங்குடி, அசூர், சூரியூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் 32 இடங்களில் தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலைஞரின் நூற்றாண்டு விழா கல்வெட்டை திறந்து வைத்து கட்சிக் கொடியை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் இனிப்புகளையும் மற்றும் உணவும் வழங்கினார்.

இந்த விழாவில் தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், தி.மு.க. நிர்வாகிகள் அ.த.த.செங்குட்டுவன், ஜெகதீசன், கயல்விழி, பாலமுருகன், சாந்தகுமார், சுதாகர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன், நாமக்கல் இராணி அறிவிப்பு!

தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி புதிய மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் 07-10-2023 அன்று (சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

இக்கட்டத்தில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றுகிறார். பள்ளி கல்விதுறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மற்றும் தியாகராஜன் எம்.எல்.ஏ., திருச்சி (வடக்கு மாவட்ட கழக செயலாளர்,) திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, திருச்சி மாநகர மேயர், திருச்சி மேற்கு மாநகர செயலாளர் அன்பழகன், மு. மதிவாணன், மாநகர கழக செயலாளர் (கிழக்கு) மண்டலம் தலைவர் திருச்சி மாநகராட்சி அனைவரின் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மாநில நிர்வாகிகள், மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, வலைதளக்குழு, ஆலோசனைக் குழு உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் முரசொலியில் அறிவித்த புதிய மாவட்ட நிர்வாகிகள், அனைவரும் கூட்டத்தில் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஹெலன் டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிரணி

**நாமக்கல் இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டரணி